Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE ELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 40
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 8 முஹறம் 24 திங்கட் கிழமை (22-3-71)

நவநாகரிக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹீரன் ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி 'இரத்தினம்ஸ்'
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# பேராதனை பல்கலைகழகத்தில் தேசவிரோத நடவடிக்கை!

## நாசகாரப்பொருட்கள் அகற்றப்பட்டு விட்டன

### அமைதி நிலவுவதாக அறிவிப்பு

கண்டி, ஞாயிறு

**பேராதனை பல்கலைக்கழகத்தில் தேசவிரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான ஆதாரம் பொலிஸாரும் இராணுவத்தினரும் நடத்திய 'வேட்டையில்' கிடைத்துள்ளது**

ஆயினும் இப்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமைதி நிலவுவதாகவும். பல்கலைக்கழக வளவிலிருந்து நாசகார பொருட்களெல்லாம் அகற்றப்பட்டு விட்டதாகவும் மாணவர்களுக்கு எவ்வித தீங்கும் இனி ஏற்படாதென்றும் அறிவிக்கப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழக மாஸ் விடுதி மண்டபத்தில் வெடிகுண்டு வெடித்ததைத் தொடர்ந்து அம்மண்டபத்தின் ஒரு பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

பேராதனை பல்கலைக்கழக மாஸ் மண்டபத்தில் குண்டு ஒன்று வெடித்த சம்பவத்தைத் தொடர்ந்து தேடுதல் 'வேட்டை' நடந்தது.

கண்டி இராணுவப் பிரிவு அழைக்கப்பட்டு பொலிஸாரும் ராணுவமும் மாஸ் விடுதியில் தேடுதல் 'வேட்டை' நடாத்தியது. இங்கு 19 கைக்குண்டுகள் 3 ஆயிரம் அதிர்வெடிகள் 500க்கு மேற்பட்ட டைன பெற்றோல் ஆகியன இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. இராமநாதன் விடுதி மண்டபத்திலும் நாசகாரப் பொருட்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன. ஒபயசேகரா விடுதிமண்டபத்தில் வெடிகுண்டுகள் தயாரிப்பதற்கான நாசகாரப் பொருட்கள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. மைற்றுள் பெருந்தொகையான கண்ணுடித்துண்டுகள் ஆணிகள் இரும்புக்கம்பிகள் ஆகியன இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன.

தேசவிரோதத் துண்டுப் பிரசுரங்களும் பெருந்தொகையாகக் கண்டுபிடிக்கப்

(8ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்குப் புதிய சட்டங்கள்

கோட்டை, ஞாயிறு

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பொதுமக்கள் பாதுகாப்பு விதிகளுக்கமைய பல புதிய சட்டங்களை வகுத்துள்ளார்

திவைத்தல், கொள்ளையடித்தல் போன்ற குற்றங்களைச் செய்வோருக்கு கடுமையான தண்டனை கிடைக்கக் கூடிய விதத்தில் இந்தச் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றவாளிகளுக்கு மரண தண்டனையோ, ஆயுட்கால தண்டனையோ வழங்கப்படும்.

சட்ட விரோதமான முறையில் வெடிகுண்டு தயாரித்தல், ஆயுதங்கள் வைத்திருத்தல், தேசவிரோத துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற செயல்களைச் செய்வோருக்கு சிறையும், அபராதமும் விதிக்க புதிய சட்டம் வகைசெய்கிறது.

## முன்னேற்பாடின்றி முஜிபூர் யாஹியாவை சந்தித்தார்!

டாக்கா, மார்ச் 21

கிழக்கு பாகிஸ்தான் தேசிய அவாமிலீக் கட்சித் தலைவர் திரு முஜிபுர் ரஹ்மான் இன்று காலை மீண்டும் முன்னேற்பாடின்றி பாகிஸ்தான் அதிபர் திரு யாஹ்யாகானைச் சந்தித்துப் பேசினர் இந்தச் சந்திப்பு

(8ம் பக்கம் பார்க்க)

## 'பிறரின் தூண்டுதல் பேரிலேயே' மனோரமா பேசினுரென நினைத்தேன்

### பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப வழக்கில் நடராஜா சாட்சியம்

கொழும்பு, ஞாயிறு

"காலஞ்சென்ற அருச்சுனராசாவுக்கும் எனக்கும் எவ்வித பகைமையும் கிடையாது. அதனல்தான பிறரின் தூண்டுதலின்பேரில்தான் மனோராமா தன் தந்தையின் கொலையில் என்னையும் சம்பந்தப்படுத்திப் பேசியிருக்கலாமென்று நினைத்தேன்"

கடந்த பொதுத்தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டவரான தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு என் நடராசா பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப வழக்கில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஆட்சேப வழக்கு

(8ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அசைஸ் விசாரணை

## கொலை வழக்கில் எதிரிக்கு 2 வருடக்கடூழியம்

யாழ்ப்பாணம், திங்கள்

முரசுமோட்டை கொலை வழக்கில் எதிரியான ராயப்பு என்பவருக்கு 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதிபரசர் ஜி. ஜி வீரமந்திரி முன்னிலையில் நேற்று இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது.

இவ்வழக்கில் முரசுமோட்டையில் 70 ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் தேதி எம் கே. ராசையா அல்லது ராயப்பு

(5ம் பக்கம் பார்க்க)

மற்றும் 10,403 நைலெக்ஸ் சேலைகள்

மார்ச் 24ம திகதி சிட்டிழுப்பில்

இறக்குமதி செய்யப்பெறறு உள்ளூரில் அச்சடித்துத் தயாரித்த 6 யார் 45"

நைலெக்ஸ் சேலைகள்

தலா ரூபா 49-50 சதத்தை விசேஷ விலையாகக்கொண்டது.
சிங்கள - தமிழ் புதுவருட விசேஷ பரிசுகளாக
தேசிய லொத்தர்சபை இவற்றை உங்களுக்கு வழங்குகிறது:
இன்றே ஒரு குலிப் டிக்கட்டைப் பெற்று
நைலெக்ஸ் சேலை யொன்றைப் பரிசாகப் பெறுங்கள்.

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரேமேடையில் 4 நாடகங்கள்

யாழ்ப்பாணம், திங்கள் கட்டுவன் தெற்கு பாரதி சனசமூக நிலையத்தாரால் ஒரே மேடையில் நான்கு நாடக நடன நிகழ்ச்சிகள் வருகிற ஏப்ரல் மாதம் 2-ம் திகதி நடாத்தப்பட விருக்கிறது.

திரு. மூ. தருமமூர்த்தி தலைமையில்நடைபெறவிருக்கும் இந்நாடகவிழாவின் போது மயிலிட்டிக்கிராம சபைத்தலைவர் திரு. கு தி. இராஜதுரை பிரதமவிருந்தினராக கலந்து உரையாற்றுவார். 'இயமன்', 'இரு ஜீவன்கள்', 'அப்பல்லோ ஆறுமுகம்', 'சோக்கல்லோ' போன்ற நாடகங்கள் இடம் பெறும்.

## 341-வது சுவீப்

கொழும்பு ஞாயிறு தேசியலொத்தர்சபையினரின் 341வது இலக்க சுவீப் சீட்டிழுப்பு இம்மாதம் 24-ம் திகதி மாலை 5-15 மணிக்கு ஹொரணை நகரசபைமண்டபத்தில்வைத்து அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

பரிசுபெறும் டிக்கட்டுகளை கொழும்பிலுள்ள தேசிய லொத்தர்சபைக் காரியாலயத்தில் இம்மாதம் 29ம் திகதி காலை ஒப்படைத்து பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேசன் ஜெயலலிதா நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி முத்துராமன் - நிர்மலா நடித்த
வீட்டுக்கு வீடு

WINDSOR - JAFFNA
Winner of 11 Academy awards including "Best Picture"
From Metro - Goldwyn - Mayer
William Wyler's Presentation of
BEN HUR
Time 10-00 A M. 2-30, and 7-00 P. M.

ரீகல் யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30
ராஜ்கபூர் நர்கிஸ் நடித்த
அவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கல்கியில் 'சோ' எழுதிய 'யாரோ இவர் யாரோ' தொடர்கதை முழுநீள ஹாஸ்ய படமாக...



ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
சோ - மனோரமா - நாகேஷ் நடித்த
ஆயிரம் பொய்

கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி காஞ்சனா நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா
வெலிங்டன் (யாழ்நகர்)
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா நடித்த
மூன்றெழுத்து (கலர்ப்படம்)


## வேலணை கிராமச்சபை கேள்வி அறிவித்தல்

வேலைவிபரம்: மூடிப்பின்ளை யார் கோவில் றோட்டு வேலை 8-ம் வட்டாரம்.

வேலணைக் கிராமச்சபைத் தலைவரால் மேற்குறிப்பிட்ட வேலைசெய்வதற்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் 1971-ம் ஆண்டு பங்குனிமாதம் 30-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணி வரையும் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 29-3-71-ம் திகதி நண்பகல் 12 மணிவரையும் கேள்விப் பணம் ரூபா 50/-ம் பத்திரப் பணம் ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் உத்தியோக பூர்வமான பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரருக்குவழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராமச் சபைக் காரியாலயத்திலும் தீவுப்பகுதி பகிரங்க வேலைப் பகுதி காரியாலயம் வேலணையிலும் அறிந்துகொள்ளலாம்.

இப்படிக்கு
நன்றியுள்ள,
ஒப்பம் க. சதாசிவம்,
தலைவர்,
கிராமச்சபை வேலணை.

3216

## அற்றோனித் தத்துவம் அழித்தல்

இருபாலை சின்னப்பிள்ளை அருளம்பலமும் பெண் தெய்வநாயகியும் ஆகிய நாங்கள் 1970-ம் ஆண்டு புரட்டாதி மாதம்19-ந்திகதி நொத்தாரிஸ் ச. சுப்பிரமணியம் மோதாவில் 3834 இலக்கத்தில் முடித்த அற்றோனிப்பவரால் இருபாலை வேளாதோப்பு குமாரசாமி இராமலிங்கம் என்பவரை எங்கள் அற்றோனித் தத்துவகாறனுக நியமித்த மேற்படி இலக்கம் கொண்ட அற்றோனிப்பவரை இத்தால் அழித்து பலனற்றதாக்கிவிட்டோமென்பதைச் சகலருக்கும் இத்தால் அறியத்தருகின்றோம். ஆகையால் குறித்த இராமலிங்கம் எங்கள் சார்பாகவும் எங்களுக்காகவும் எவ்வித செயல்கள் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் இல்லையென்றும் நாங்கள் பொறுப்பாளிகளாக இருக்கமாட்டோமென்றும் இதனுல் அறியத்தருகின்றோம்.

சி. அருளம்பலம்,
அ. தெய்வநாயகி.

3214


MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45p.m.
Alain Delon
Senta Berger
in
DIABOLICALLY YOURS
(Color)

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சத்தியன் - ஷீலா - மாது நடித்த
செம்மீன்

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
சிவாஜி-சரோஜாதேவி நடித்த
அஞ்சல்பெட்டி 520

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி ஆர் - ஜெயலலிதா
அடிமைப்பெண்


## பண்டிதரின் தீர்மானம் நிறைவேறியது

யாழ்ப்பாணம், திங்கள் ஒவ்வொரு தொகுதியிலும் இந்த ஆண்டில், கடற்றொழிலாளர்களுக்கு 25 வீடுகள் கட்டவேண்டுமென்று ஊர்காவற்றுறை எம்பிபண்டிதர் க பொ இரத்தினம் நேற்று யாழ். கச்சேரி மண்டபத்தில் நடந்த யாழ். மாவட்ட கடற்றொழில் குழுக் கூட்டத்தில் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஒவ்வொருதொகுதியிலும் கடற்றொழிலாளருக்கு வீதிகள் அமைத்தல், வீடுகள் கட்டுதல் பற்றி ஆராயப்பட்டது. ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு வீதியமைக்கப்படவேண்டுமென ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

டைனமைட் மூலம் மீன் பிடிப்பவர் மீது நடவடிக்கை எடுப்பது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது ஊர்காவற்றுறையில் மீன் பிடிதுறைமுகம் நிறுவப்படவேண்டும் என்றும்யோசனை தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை எம் பி திரு எஸ் ஜே வி செல்வநாயகம், வட்டுக்கோட்டை எம் பி திரு தியாகராசா, உடுவில் எம் பி திரு வீ தர்மலிங்கம் மற்றும் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் காரியாதிகாரிகள், மீன்பிடி இலாகா உத்தியோகத்தர் கலந்துகொண்டார்கள்.

## யாழ். மாவட்டப் பாடசாலை உடற்பயிற்சி போட்டி

பருத்தித்துறை, ஞாயிறு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி இம்மாதம் 28-ம் திகதி நடைபெறவிருக்கிறது. யாழ். மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் போட்டிக்கு வடமாநிலகல்வி யதிபர் திரு. டபிள்யூ டீ. சி. மகாதந்திலா தலைமை தாங்குகிறார். வழக்கத்திலும் பார்க்க அதிகமான பாடசாலைகள் இவ்வாண்டு இப் போட்டியிற் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

## உல்லாசப் பிரயாணிகள் அதிகரிப்பு

கோட்டை, ஞாயிறு 1970-ம் ஆண்டில் இலங்கை உல்லாசப் பிரயாணிகளால் அரசாங்க வருமானமாக 21,500,000 ரூபா கிடைத்துள்ளது எனக்கணக்கெடுக்கப்பட்டுள்ளது 1970-ம் ஆண்டில் 46,247 பேர் உல்லாசப் பிரயாணிகளாக இலங்கை வந்துள்ளனர். 1969-ம் ஆண்டில் இங்கு விஜயம் செய்தோர் தொகை 40,204 பேர் ஆகும். இந்திய ரல்லாத அந்நிய தேசத்தைச் சேர்ந்தோர் 1970-ம் ஆண்டில் 31,363 பேர் இங்கு வந்துள்ளனர். இவ்விபரங்களை இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## புதிய தபாற் கந்தோர்

எழுதுமட்டுவாள், ஞாயிறு காங்கேசன்துறையில 2 மாடியில் அமைக்கப்படவிருக்கும் புதிய தபால்நிலையத்தின் கட்டிடவேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. வடபகுதிக் கட்டிடத்திணைக்களம் இவ்வருட முடிவுக்குள் தபாற்பகுதியினரிடம் கட்டிடத்தை ஒப்படைக்குமென நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### தேவை

பிரஸ்ஸியர், சன்ரூம், கவுண் தைப்பதற்கு அனுபவம் மிக்க பெண் தேவை. 25-3-71 காலை 9-00-10-00 மணிக்கும் இடையில் நேரில் வரவும் விலாசம்: அஞ்சலின் காமன்ஸ், 119/11. K K S. வீதி, மைலன்ட்ஸ் பில்டிங், யாழ்ப்பாணம். 2718

தற்காலிகசித்த ஆயுர்வேத வைத்தியர் வயது 25 முதல் 40 வரை தராதரம்- அங்கீகரிக்கப்பட்ட சித்த-ஆயுர்வேத வைத்திய சான்றிதழ் சம்பளம்-ஆயுர்வேத வைத்தியருக்குரிய திரட்டிய நாளாந்த சம்பளம். மிக அண்மையில் பெற்ற மூன்று ஒழுக்கச்சான்றிதழ்களுடன் வயது. தராதரம் ஆகியவற்றை நிரூபிக்கும் சான்றிதழ்களின் பிரதிகளும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும், விண்ணப்பங்களை தலைவர், கிராம சபை புங்குடுதீவு என்ற விலாசத்திற்கு 31 3 71க்கு முன்னர் பதிவுஞ்சலில் அனுப்பவும், கா. மதியாபரணம் ஜே. பி. தலைவர் கிராமசபை, புங்குடுதீவு. 20-3-71. 2719

### இசைவகுப்பு

வீணை வகுப்:

சென்னை இசைப்பேராசிரியர் M A. கல்யாண கிருஷ்ணபாகவதர் அவர்களின் திறமைமிக்கசிஷ்ய இராமனுகன் இசைக்கல்லூரி முன்னுள் சிரேஷ்ட வீணை ஆசிரியை ஒருவரால் நடாத்தப்படும் (உருத்திர) வீணை இசைவகுப்புகட்கு (வாய்ப்பாட்டு கீழ்ப் பிரிவு) மேலும் சில புதிய மாணவிகட்கு மட்டும் இடமுண்டு. இடம்: "ராஜாலயா", கைடச்சாமி வீதி. நீராவியடி. வண்ணர் பண்ணை, தொலைபேசி: 335. 2720

### கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், திங்கள் இம்மாதம் 17-ந் திகதி புதன்கிழமை அல்வாய் ஸ்ரீலங்கா சைவவித்தியாசாலை மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் யாழ்ப்பாணச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு பலாலி விமானநிலையம், தோலகட்டி, விவசாயப்பண்ணை உட்பட யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களையும் சென்று பார்வையிட்டனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 22—3—71

(செய்திகள்: காலை6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344மீ அன் 49 மீ**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-35 பெண்ணுலகம், 7-00 ஞானமஞ்சரி, 7-15சித்திரம், 7-45 வாத்தியஇசை. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்தித்தொகுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாவோஸில்

# வட வியட்னுமியரின் எதிர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை

## தென் வியட்னும் துருப்புக்கள் நிலைகளுக்கு திரும்புகின்றன

ஹனேய், மார்ச் 21

அமெரிக்க ஆதரவுடன் லாவோஸுக்குள் நுழைந்துள்ள தென் வியட்னும் படைகள் வட வியட்னுமியரின் எதிர்த் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திக்குமுக்காடுவதாகத் தகவல் வந்திருக்கின்றது.

வட வியட்னுமியர் பீரங்கிகளாலும் ரொக்கட்டுகளாலும் தாக்கி வருகிருர்கள்.

வட வியட்னுமியர் செலுத்திவரும் புதியரக ரொக்கட்டுகளால் அமெரிக்க தென்வியட்னும் படைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டு வருகின்றது.

தென்வியட்னும் படைகள் எல்லைப்புற முகாம்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றன.

வட வியட்னுமியர் புதுவிதமான ரொக்கட்டுகளைப் பாவிக்கிருர்கள் என்றும் இந்த ரொக்கட்டுகள் செலுத்தப்படுவதை அணுசக்தியால் இயங்கும் தகவல் அறியும் கருவிகளால்கூட கண்டுபிடிக்க முடிவதில்லையாம்.

பழைய நிலைகளுக்கு திருப்பிக் கொண்டிருக்கும் தென் வியட்னும் படைகள் மேலும் ஒரு புதிய வலுத் தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்றும் அதற்கு ஈடு கொடுக்க கம்யூனிஸ்ட் படைகள் தயாராகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

வட வியட்னுமியருக்கு பலத்த சேதங்களை ஏற்படுத்தி வருவதாக தென் வியட்னுமியர் கூறிக்கொள்கின்றனர். என்ருலும் அவர்கள் தரப்பில் பெரும் இழப்பு ஏற்பட்டு வருவதாகவே கருதப்படுகின்றது.

லாவோஸிலுள்ள 9வது பாதைக்கு வடக்கே புதிதாகச் சண்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமேற்கு எல்லையில் இருந்து 9 மைல்களுக்கப்பால் வடவியட்னுமிய படைகள் 18 தென் வியட்னுமியரைக் கொன்றுள்ளதோடு 57பேரைத் தாக்கியுள்ளதாகவும் சைகோன் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி 9வது பாதைக்குத் தெற்கே சண்டைநடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது இப் பாதைக்கு வடக்கிலும் கடந்த சில தினங்களாக இரு படைகளுக்கிடையேயும் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன வெனினும்மேற்கே கடுந்தாக்குதல் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது லுலுவுக்கு அருகே வடவியட்னுமிய படைகளால் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் தென் வியட்னுமிய படைகள் அவ்விடத்தை விட்டகன்றதாக தெரியவருகிறது.

48 மணித்தியாலங்களில் 3000க்கு மேற்பட்ட தென் வியட்னுமியர் லாவோஸிலிருந்து வெளியேறியுள்ளனரெனவும் மேலும் அங்குள்ள 18000 அரசாங்க துருப்புக்களும் 3000 கடற்படை வீரர்களும் அகற்றப்படுவார்கள் எனவும் சைகோன் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே இரண்டு நிலைகளிலிருந்து தென்வியட்னுமியர் வெளியேறியுள்ளனராம்.

......

### புதிய எண்ணெய் கிணறு

புதுடில்லி, மார்ச் 21

குஜராத்தில் அலியாபேட் என்ற இடத்தில் புதிதாக எண்ணெய்க்கிணறு ஒன்றை இந்திய நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிருர்கள். சுமார் 1500 மீட்டர் ஆழத்துக்கு மண்ணைக் குடைந்து இந்தக் கிணற்றை அவர்கள் தோண்டினுர்கள்.

......

### 40 கோடி ரூபா கடன்வசதி

டோக்கியோ. மார்ச் 21

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவி செய்வதற்காக ஜப்பான் உலகவங்கிக்கு 10 கோடி டாலரை கடனுக வழங்கியுள்ளது இதுவரை 40கோடி ரூபாவை ஜப்பான் உலக வங்கிக்கு வழங்கியுள்ளது

## வட அயர்லாந்து பிரதமர் விலகினுர்

லண்டன், மார்ச் 21

வட அயர்லாந்து பிரதம மந்திரி மேஜர் சிச்செஸ்டர் கிளார்க் தமது பதவியை ராஜினுமா செய்துவிட்டார்.

வட அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள இனக்குமுறல்களின் காரணமாக அவர் பதவி துறந்தாகத் தெரிகின்றது.

வடஅயர்லாந்தில் சமீபகாலமாக நடைபெற்று வரும் குழப்பங்களையும் வன்முறைகளையும் கொலைகளையும் கட்டுப்படுத்துவதில் இவர் தோல்வியடைந்துவிட்டதாக மந்திரி சபையிலேயே அவருக்கு எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது.

ராஜினுமா செய்வதைத் தவிர வேறுவழியில்லை என்று அவர் அறிவித்திருக்கிருர்.

திரு. கிளார்க் ராஜினுமா செய்திருப்பது குறித்து பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. எட்வார்ட் ஹீத் கவலை தெரிவித்திருக்கிருர். வட அயர்லாந்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகாரணமாக பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹீத் தமது மேற்கு ஜெர்மன் விஜயத்தை ரத்துச்செய்திருக்கிருர்.

## ரஷ்யாவுடன் உறவை வளர்க்க பிரி. விருப்பம்

லண்டன், மார்ச். 21

சோவியத் யூனியனுடன் பயன்மிக்ககூட்டுறவை வளர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களை பிரிட்டன் நாடுவதாக பிரிட்டிஷ் வெளிவிவகார சாம்ராஜ்ய மந்திரி சேர். அலெக்ஸ் டக்ளஸ் ஹியூம் லண்டனில் கூறினுர்.

லண்டனில் நடைபெற்ற விருந்துபசாரம் ஒன்றில் பேசிய அவர், இரண்டாவது உலக யுத்தத்தின்போது பிரிட்டனும் ரஷ்யாவும் நேச நாடுகளாக ஓர் இலட்சியத்தில் ஒற்றுமை கண்டன என்று குறிப்பிட்டார். இதனை யடுத்து, அணுவாயுத பரீட்சைத் தடைபோன்ற பல விவகாரங்களில்இவ்விரு நாடுகளும் ஒன்றுகூடி சாதனைகளை நிலைநாட்டின என்றும் அவர் சொன்னுர்.

கம்யூனிஸத்திற்கும் மேற்கிற்கும் இடையே ஒரு மோதல் ஏற்படுவதற்கான அவசியம் எதுவுமில்லையென்றும் இதற்குப் பதில் இவ்விரு முகாம்கள் மத்தியில் பரஸ்பர நல்லெண்ணமும் நல்லுறவும் வளர வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முக்கிய சர்வதேசப் பிரச்னைகளில் இரு நாடுகளுக்கும் மத்தியில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதை தாம் விரும்பியதாகக் கூறிய அமைச்சர் இந்தோ-சீன பிரச்னை பற்றிய மாநாட்டில் ரஷ்யாவும் பிரிட்டனும் கூட்டுத் தலைமை வகிப்பதால் இரு நாடுகளும் மனம்விட்டுப் பேசும் சந்தர்ப்பங்கள் நிறையவுண்டு என்ருர்.

## பூட்டோ டாக்கா செல்கிருர்

கராச்சி, மார்ச் 21

டாக்காவில் ஷேக் முஜிபுர் ரஹ்மானுடன் அதிபர் யாஹ்யாக்கான் நடத்தி வரும் அரசியல் அமைப்பு சம்பந்தமான பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக மேற்குப்பாகிஸ்தான் மக்கள் கட்சித்தலைவர் திரு சுல்பிகார் அலிபூட்டோ இன்று காலையில் கிழக்குப் பாகிஸ்தானுக்குப் புறப்பட்டுப் போகிருர்.

டாக்காவரும்படி யாஹ்யாக்கான்விடுத்தஅழைப்பை முதலில் பூட்டோ நிராகரித்திருந்தார் இப்பொழுது யாஹ்யாக்கானிடமிருந்து தமக்கு விளக்கம் கிடைத்திருப்பதாகவும் அதனுல் தாம் பேச்சுக்களில் கலந்து கொள்ளடாக்கா செல்வதாகவும் பூட்டோ தெரிவித்திருக்கிருர் இதேசமயம் அதிபர் யாஹ்யாக்கானிடம் தாம் நடத்திவரும் பேச்சுக்களில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக ஷேக் முஜிபுர் ரஹமான் கூறியிருப்பதாகவும் தெரிகின்றது.


‘சோவியத் நாடு’

★ சோவியத்-ஈழத்து மக்களின் நட்புறவின் குரல் ”சோவியத் நாடு”

‘சோவியத்நாடு’ வாசியுங்கள்

★ சோவியத் மக்களின் சாதனைகளைப் பற்றியும், விசேஷமாக மத்திய ஆசிய மக்களின் புதிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.



‘சோவியத்நாடு’ வாசியுங்கள்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:-

தகவல் பகுதி, சோவியத் ஸ்தானிகராலயம்,

27, ஸர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7.


## ஒரிஸாவில் இந்திரா கட்சி அரசு?

புதுடில்லி, மார்ச் 21

ஒரிஸாவில் இந்திரா காங்கிரஸ்கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு உறுதிகொண்டிருக்கின்றது 140 பேர் கொண்ட இந்தச் சட்டசபையில் 54 அங்கத்தவர்களை இந்திராகாங்கிரஸ் கொண்டிருக்கின்றது.

இந்தக் கட்சியில் சட்டசபைக்குழுத் தலைவராக முன்னுள் முதலமைச்சர் திரு ஹரிகிருஷ்ணமேத்தா தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்

மந்திரிசபை அமைப்பது எமது கடமை. மார்ச் 23-ம் திகதிக்கு முன் இதனைச் செய்தாக வேண்டும், இல்லையெனில் ராஷ்டிரபதி ஆட்சியே தொடர வேண்டும் என்று திரு. மேத்தா கூறினுர்.

உட்கல் காங்கிரஸ்கட்சியையுங் கூட்டுச் சேர்த்துக் கொள்வதுபற்றி தாம்பேச்சு நடத்தப் போவதில்லையென்றும் இதுபற்றி மத்திய தலைவர்களே முடிவு எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மைசூர்

மைசூர் மாநிலத்தில் இந்திராகாங்கிரஸ்கட்சி மாற்று அரசை அமைப்பதா இல்லையா என்பதுபற்றி நாளைய தினம் முடிவாகத் தெரிய வரும். இதுபற்றி முடிவு செய்ய அவகாசம் தரும்படி இந்திரா காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் திரு சித்தவீரப்பா கவர்னரிடம் அவகாசம் கோரியிருக்கிருர்

மே. வங்கம்

மேற்கு வங்காளத்தில் இந்திராகாங்கிரஸ்கட்சி அரசாங்கம் அமைப்பதுபற்றி மத்திய தலைவர்கள் பாங்களா காங்கிரஸ் தலைவர் திரு அஜோய்குமார் முகர்ஜியுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைநடத்தி வருகிருர்கள்.

மத்திய தலைவர்கள் மேற்கு வங்காளத்திலுள்ள இதர சிறுகட்சிகளுடன் நடத்தியுள்ள பேச்சுக்களில் மார்க்ஸீயக்கட்சியில்லாத ஓர் அரசு அமைய வேண்டும் என்பதில் இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது. இதனை முஸ்லிம்லீக்கும் ஆதரிக்கவிருக்கின்றது.

இந்திரா காங்கிரஸ் அரசு அமைப்பதற்கு ஆதரவளிக்க முடிவு செய்திருப்பது குறித்து மறுபரிசிலனை செய்யும்படி மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பாரத கம்யூனிஸ்ட் கட்சியைக் கேட்டிருக்கிருர்கள்.

இதறகு பாரத கம்யூனிஸ்ட்கட்சியினர்ஏற்கனவே அளித்துள்ள பதிலில் மார்க்ஸீய கம்யூனிஸ்ட்கள் இதர கட்சித் தலைவர்களைக்கொலை செய்வதையும் முட்டாள் தனமான விவாதங்களையும் கைவிட வேண்டும் என்றும் கோரியுள்ளனராம்.


ரூபா 1000/- தொடக்கம்

ரூபா 5000/- வரை சேமிப்புக்கு

வருடம் 7 சத வீத வட்டி

கொடுக்கப்படும்

இச் சேமிப்பை 7 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.

தம்பி அன் கோ.,

284, காங்கேசன்துறை வீதி :: வண்ணுர்பண்ணை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ...ரசியல் அமைப்பு

# ...ள் வேண்டாம்; தேசிய

# ...க்கப்படாது

## ...சன் )

...ரப்படுத்துவதாக உள்
... அதாவது பசளறயி
...ள ஒருவருக்கு கோட்
...பிலுள்ள நான்கு பேருக்
... வாக்குபலத்தை அளிப்
...கும். தேர்தல் தொகுதி
... ஒரே சீராக இல்லாமல்
...தொகுதிகளில் அதிக
...வாளரும், வேறுதொகு
...வில் ...தில் நான்கில்
...பங்கினருமே இருப்பது
...நாயக நீதிக்குமுரணாகும்
...தமாற்ற வேண்டுமே
...றி, அப்படியே புதிய
...சியல் அமைப்பிலும்
...த்து விடக்கூடாது.
...முறை சேர்த்துவிட்டால்
...ஷ மஜோரிட்டி பலத்
...லயே இதைத் திருத்த
...யும் ...கவே இ...
...ள ...வகைப்ப...,
...காளர் தொகுதிகளை
...கவேண்டுமென்ற வேது
...யைக்கைவிட வேண்டும்.

...மன அமெம்பர்கள்

...யமன மெம்பர்களை
... அரசியல் அமைப்பில்
...வி... வேண்டுமென்று
...கம் கொண்டிருக்கை
... அரசியல் திர்ணய
...யிலே ...நியமன மெம்பர்
...யும் சேர்த்திருப்பது
...மையல்ல. புதிய அரசி
...அமைப்பின்படி நியமன
...பர்களே இருக்க முடி
...நிலையில் முதல் தேசிய
...யிலே எவ்விதம் மெம்
...ளாக அனுமதிக்கமுடி
... இது திருப்தியில்லாத
...விதி இதையும் நீக்கிவிட
...ண்டும்.

...வ... ஆயு...

...மாவது தீர்மானத்தின்
...கத்தில் ஒருதவறு உள்
...
...சிய சபையின் ஆயுள்

6 வருடகாலத்துக்கு மேல் இருக்கப்படாதென்ற அதே சமயம் முதல் தேசியசபை மட்டும் ஆறுவருடகாலத்துக்கு இருந்தாகவேண்டுமென்று கூறுகின்றது முதல் சபையட்டும் ஆறுவருடகாலத்துக்கு இருந்தாக வேண்டுமாயின் அது முற்றிலும் திருப்தியான நிலையன்று.

மேலும் பல நாடுகளிலும் 5 வருடமும் அதற்குக்குறைவாகவும் சட்டசபையின் ஆயுட்காலமுள்ளன. இதை நீடிப்பதால் மக்களின் உரிமையும் பாதிப்பதாகும் அங்களுக்குள்ள வாக்குரிமையை பொதுமக்கள் பெரிதும் மதித்து பல சங்கடங்களையும் பொருட்படுத்தாமல் அந்த உரிமையைப் பயன்படுத்துகின்றார்கள் தேசிய சபையின் ஆயுட்காலத்தை 6 வருடமாக உயர்த்துவதைவிட 4 வருடமாகக் குறைப்பதை மக்கள் வரவேற்பர் ஆனால் இந்த புதிய அரசியலைத் தயாரிக்கும் சாக்கிலே இப்போதுள்ளசபையின் ஆயுளை புதிய பெயரின் கீழ் நீடிக்கவே ஏற்பாடு செய்யப்படுவது சரியல்ல ஆகவே 7வது தீர்மானத்தை அதற்கேற்ப திருத்தவேண்டும்.

## ஞான ஒடுக்கம்

அரியாலை, திங்கள்

யாழ். மேற்றிராசன ஆசனக்கோவிலின் நாளை பாலகுக்கால மகாஞான வொடுக்கம் ஆரம்பமாகிறது. தபசுகாலத்திற்கான ஞானவொடுக்கம் இரு பிரிவாக நடைபெறவுள்ளது ஆண்களுக்கு 23-ம் திகதி முதல் 27-ம் திகதிவரையும் 29-ம் திகதி முதல் ஏப்ரல் 3-ம் திகதி வரை பெண்களுக்கும் நடைபெறவுள்ளது.

## சேவை நலம் பாராட்டு

சுழிபுரம் ஞாயிறு

பண்ணாகம் மெய்கண்டான்மகாவித்தியாலய அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. செ. ஸ்ரீநிவாசனதும் மற்றும் இரு சக ஆசிரியர்களினதும் சேவை நலம் பாராட்டு விழா இம்மாதம் 24-ம் திகதி மேற்படி வித்தியாலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது. விழாவை யொட்டி மெய்கண்டான் மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

---

அ... பன. ஞாயிறு

கள்ளக் கடத்தலையும், சட்ட விரோதக் குடியேற்றத்தையும் தடுக்குமுகமாக நாகர்கோயில் கடற்கரையில் புதிய இராணுவக் கிளை முகாம நிறுவப்பட்டுள்ளது.

## புற்றுநோய் நிவாரண சங்க யாழ். கிளை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை புற்று நோய் நிவாரண சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்த கூட்டம் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் டாக்டர் கே. கனகரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு பொதுக் கூட்ட அறிக்கை வாசித்து சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைவர் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார். அறிக்கை தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையமொன்றை நிறுவுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதென்றும் கூடுதலான நிவாரணத்தைச் சேகரித்து கஷ்டப்படுபவர்களுக்கு மேலும் உதவி அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது

யாழ்ப்பாணக் கிளையின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர் போஷகர் கௌரவ சுகாதார மந்திரி தலைவர்: டாக்டர் கே. கனகரத்தினம். உபதலைவர்கள்: முதலியார் சி முத்துத்தம்பி திருமதி ஏ. சுவாமிநாதன் காரியதரிசி: திரு ஏ குலேந்திரன் உதவிக்காரியதரிசி: டாக்டர் டி ரி செல்வத்துரை, தனாதிகாரி: திரு கே ஐயாத்துரை உதவித்தனாதிகாரி: திரு சி முத்துக்குமாரசுவாமி

நிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் டாக்டர்கள் ஏ வி ஏ வேதநாயகம் வி ரி பசுபதி என் கணேஷநாதன் எஸ் ராஜரத்தினம் ஆ ஈ டபிள்யூ ஜோரத்தினம்

## திருத்தத்திற்கு பாராட்டு

மாவிட்டபுரம் ஞாயிறு

சமூகக்குறைபாட்டு ஒழிப்புச் சட்டத்தைத் திருத்தி சிறுபான்மைத் தமிழரின் பிரச்னைக்குத் தீர்வுகாண அரசுமுனைந்தமைக்கு பாராட்டுத் தெரிவித்து தனது மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை இலங்கை திருவள்ளுவர் மகாசபை நிறைவேற்றியுள்ளது.

## நியமனம்

நாவற்குழி. ஞாயிறு

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு. எஸ் எம் ... யோகம் நியமனம் பெற்றுள்ளார்.

முன்னாள் அதிபர் திரு: இ கந்தையா ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து இவர் நியமிக்கப்பட்டார்.

# 'அடிக்காதே என்று கூறிய அண்ணனுக்கும் எதிரி அடித்தார்'

## மன்னார் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்

குலேபகாவலி படம் பார்க்க சென்றிருந்தேன். என்னுடன் 14 பேர் வந்திருந்தனர். நான் 2 தடவை பலமாகத் தும்மினேன். எதிரியும் அவரது மூத்த சகோதரரும் வந்து ஏன் தும்மினாய் என்று கேட்டு அடிக்க வந்தார்கள். எதிரியுடன் 25 பேர் படம் பார்க்க வந்திருந்தனர் எதிரியும் சகோதரனும். என்ன சேட்டை விடுகிறீர்கள் என்றனர். அவர்கள் என்னை அடிக்கவில்லை அதன்பின் படம் ஆரம்பமாகியது.

மன்னார் கொலை வழக்கில் சாட்சியமளித்த மொகமட் காசிம் அக்பர் மேற்கண்டவாறு கூறினார். இவ் வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வீரமந்திரி முன்னிலையில் ஆரம்பமானது.

இவ் வழக்கில் மன்னாரை சேர்ந்த எருக்கலம்பிட்டியில் 69ம் ஆண்டு டிசம்பர் 13ம் தேதி செய்யது முகமர் தலாவுதீன் என்பவர் முகமது காசிம் நூர்தீனை கொலை செய்ததாகவும் அதே நேரத்தில் அதே இடத்தில் முகமது காசிம் அக்பரை கத்தியால் குத்தி காயம் ஏற்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் கே வி எஸ் சண்முகநாதன், அட்வகேட் சி. ஆறுமுகத்தின் உதவியுடனும், புறக்டர் கே. பூபாலனின் அனுசரணையுடனும் ஆஜரானார். எதிர்க்காக அரசாங்கத்தால் அட்வகேட் ஏ விஸ்வநாதன் நியமிக்கப்பட்டிருந்தார்.

மொகமத் காசிம் அக்பர் சாட்சியமளிக்கையில்மேலும் கூறியதாவது: மன்னாரில் இருந்து தாராக்குண்டு 4 மைல தூரத்திலிருக்கிறது. தாராக்குண்டிலிருந்து எருக்கலம்பிட்டி ஒருமைல் தூரத்திலிருக்கிறது. 1969ம் ஆண்டு றம்சான் பெருநாள் ஞாபகமிருக்கிறது. அப்பெருநாளுக்கு அடுத்தநாள் இரவு 10 மணிக்கு 5ம் கட்டையில் உள்ள தனலட்சுமி தியேட்டருக்குப் படம் பார்க்கப் போனோம். அங்கு குலேபகாவலி என்ற தமிழ்ப்படம் நடந்துகொண்டிருந்தது 2ம் வகுப்புக்கு நாங்கள் போனோம். என்னுடன் 14 பேர் வந்தார்கள். தியேட்டர் நிறைந்திருந்தது. 2ம் வகுப்புக்குச் சரியான சனம். அத்தியேட்டரில் கலரியும் இருக்கிறது. 2ம் வகுப்புக்கு பெண்களும் வருவதுண்டு. 2ம் வகுப்பில் ஆணும். பெண்ணும் கலந்திருப்பதில்லை தனித்தனியாகத்தான் இருப்பார்கள். கணவன் மனைவியாக வந்தாலும் பிரிந்துதான் இருந்து படம்பார்க்க வேண்டும் இதுதான் அத்தியேட்டரின் உள்ளவழமை

அப்போதுபடம் ஆரம்பிக்கவில்லை உள்ளே லைட் எரிந்துகொண்டிருந்தது. படம் 10-30 மணிக்கு தொடங்கியிருந்தது அந்த நேரத்தில் நான் 2 தடவை பலமாக தும்மினேன் எதிரியும் அவரது சகோதரரும் வந்து ஏன் தும்மினாய் என்று கேட்டு அடிக்க வந்தார்கள் அவர்கள் மூன்றாவது வரிசையில் இருந்தார்கள்.

நான் தும்மினது எதிரிக்கு ஆத்திரமாக இருந்திருக்கும் அவர் கோபமாக இருந்தார் படம் கொஞ்சநேரத்தில் ஆரம்பித்தது முழுப் படமும் பார்த்தோம் இடைவேளையின் போது நான் வெளியில் செல்லவில்லை நள்ளிரவு 2 மணிக்கு படம் முடிந்தது நாங்கள் தியேட்டருக்கு வெளியில் வந்தோம் வெளியிலும் லைட் எரிந்து கொண்டிருந்தது

எதிரியும், அவரது சகோதரர் கரீமும், மற்றும் இனார்களும் கேற்றடியில் கூட்டமாக நின்றார்கள். 25 அல்லது 30 பேர் நின்றார்கள். நான் வந்ததும் ஏன் தும்மினாய்? என்று கரீம் கேட்டார். எதிரி பக்கத்தில் நின்றார். தும்மல் வந்ததும் தும்மினேன் என்று நான் கூறினேன். உடனே எதிரி தன் கையால் என் கன்னத்தில் அடித்தார். அப்போது என் சகோதரன் நூர்தீன் அங்கு வந்தார். அவர் படம் பார்க்கவில்லை. வீட்டிலிருந்து வந்திருந்தார். அப்போது அவர் வந்தது எனக்கு அதிசயமாக இருந்தது. அவர் அடிக்கவேண்டாம் என்று எதிரியிடம் கூறினார். அவர் வந்தபோது அவருக்கும் எதிரி அடித்தார் நூர்தீன் திருப்பி எதிரிக்கு அடித்தார். எல்லோரும் சேர்ந்து அவரை அடித்தார்கள். என்னுடன் வந்த 14 பேரில் 2 அல்லது 3 பேர் நிற்க மற்றவர்கள் ஓடிவிட்டார்கள் சண்டை பலத்தது. இரு பக்கத்திலும் அடிபிடி நடந்தது. எனக்கும் சிலர் அடித்தார்கள். அதனால் தான் நான் உதவிக்குப் போகவில்லை.

சிறிதுநேரத்தில் எதிரியின் கையில் ஒரு கத்தியைக்கண்டேன் எதிரி வெள்ளை சாரமும் நீலசேட்டும் அணிந்திருந்தார். எதிரியைவிட வேறு எவரும்ஒன்றும் வைத்திருக்கவில்லை என்னுடன் வந்தவர்களில் சிலர் அவ்விடத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

விசாரணை இன்றுகாலை வரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

......

## வடபகுதி ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர் பைக்கிரி என்பவரை கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது

எதிர்க்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ விஸ்வநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய சார்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.


எதிர் கைமோசக்கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து நீதியரசர் தீர்ப்புவழங்கினார்.

......

புதுடில்லி மார்ச் 21

குடும்பக்கட்டுப்பாடு மக்கள் தொகையியனை பற்றி புதுடில்லியில் 6 நாள் ஆசிய கருத்தரங்கொன்று நடைபெறவிருக்கிறது

சர்வதச தொழிலாளர் நிறுவனத்தின் சார்பில் நடைபெறும் இக்கருத்தரங்கில் இலங்கைமலேசியா பமாஹாய்தொய் இந்தியா யப்பான் சிங்கப்பூர் உட்பட்ட பல ஆசிய நாடுகள் கலந்துகொள்கின்றன.





...ம் பிள்ளையின் பரதநாட்டிய அரங்கேற்றம் இம்
...ணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழக
... எஸ். பாலச்சந்தர் தலைமையில் நடைபெறவிருக்
...ல்வி சிவசக்தி இயல் இசை வாருதி யாழ்ப்பாணம்
...ிய வார் தற்போது இராமநாதன் இசைக்கல்லூரி
...ம் வாய்ப்பாட்டு கற்றுவருகிறார். 3-ம் ஆண்டு
...பாய் காரியாதிகாரி விளையாட்டுப் பொறுப்பாளர்
...இராமநாதன் கல்லூரி புவியியல் ஆசிரியர் திருமதி
... ஏ. தம்பதிகளின் புதல்வி இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தமிழினம் உரிமைகளைப் பெறக்கூடியதாக

# அரசியலமைப்பில் புதிய சட்டங்கள் இடம் பெறச் செய்ய வேண்டும்"

— அமிர்தலிங்கம்

மாவிட்டபுரம், சனி

"புதிய அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் இந் நேரத்தில் தமிழ்பேசும் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டத்தக்க வகையில் புதிய சட்டங்களை அரசியல் அமைப்பில் இடம்பெறச் செய்யவேண்டும். அப்போதுதான் தமிழினம் சுபீட்சமாக வாழ்வை அமைக்கலாம்."

இவ்வாறு சுன்னாகம் பட்டினசபை நூல் நிலைய ஆதரவில் நடந்த 51-வது கருத்தரங்கில் கலந்து பேசுகையில் தமிழரசுக்கட்சிச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினார்.

'அடிப்படைத் தீர்மானங்களின் கீழ் தமிழரின் நிலை' என்பது குறித்து உரையாற்றிய திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

1947-ம் ஆண்டு இந்தியாவில் சுதந்திரமாக்க முயன்றசமயம் இந்திய சட்டங்களை ஆங்கிலேயர் ஆக்கக்கூடாது என்று கூறி தாமே சட்டங்களை ஆக்கினார்கள். இன்றும் சட்டங்களை மாற்றி புதிய அமைப்பை ஏற்படுத்த மக்களிடம் ஆதரவு பெற்றுள்ளது இந்திரா காங்கிரஸ் இதேபோல் இங்கும் ஸ்ரீமாவோ தேர்தல் காலத்தில் அரசியல் நிர்ணய சபை அமையப்போவதாக மக்களிடம் கூறி மக்களின் சம்மதத்தைப்பெற்று புதிய அமைப்பை ஏற்படுத்த முனைகிறார். நாம்மக்களிடம்இந்த கோரிக்கையை சமர்ப்பிக்காவிட்டாலும் எம்மை தமிழ் மக்கள் 5 தடவை ஏகோபித்து அனுப்பினார்கள் என்றதால்தான் குடியரசு அமைப்புக்கு ஆதரவு அளித்தோம்.

ஒருமதம் ஒருமொழி இந் நாட்டில் இருக்கவேண்டுமானால் நாம் என்ன செய்வது?

இன்றுள்ள ஒற்றையாட்சி முறையை மாற்றவேண்டும் என்பதுதான் எம்விருப்பம். அதேபோலத்தான் சிங்கள மக்களுக்கும் விருப்பம். ஆனால் நாம் கூறுவது இன ஒற்றுமைக்கு ஒரே அமைப்பு சமஷ்டிதான் உகந்தது என்றும் சிங்களக்கட்சிகள் இந் நாட்டில் உகந்தது சோஷலிஸக் குடியரசுஎன்றும் கூறுகிறார்கள் குடியரசு ஆவதை நாம் வரவேற்கிறோம். இத்துடன் மேல்நாடுகளில் உள்ள கால்மாக்ஸ் காட்டிய சோஷலிஸத்தை இங்கு ஏற்படுத்த முனைந்தால் அது வரவேற்கத்தக்கது. ஆனால் இங்கு மேற்கொள்ளப்படும் சோஷலிஸம் ஒரு இன, மத சுபீட்சத்தைக் காட்டுவதால் பொருளாதார வளத்துக்குத்தான் உதவலாம். ஆனால் நாம்காட்டும்சமஷ்டி அமைப்பின்மூலம் இரு இன ஐக்கியம் ஏற்பட்டபின்உண்மையான சோஷலிஸ ஆட்சி தானாகவே மலரும்.

இன்றுள்ள நிலையில் அரசாங்க பலத்தால் புதிய அரசியல் அமைப்பு ஏற்படலாம் ஆனால் பிரயோசனமில்லை. ஒல்லாந்தர் போர்த்துக்கேயர் ஆங்கிலேயர் காலத்தின்பின் இலங்கையில் இரு இன ஆட்சியும் நிலவியது ஆனால் சில வகுப்புவாதிகளால் இரு இன ஐக்கியம் குலைந்துள்ளது. இன்று இந்த புதிய அமைப்பை ஏற்படுத்தும் சமயத்தில் தமது பலத்தின் மூலம் செய்யாது இந்நாட்டின் சரித்திர காலத்தைப் பார்த்து சுபிட்சத்துக்கு வழிவகுக்கத்தக்கதாகவும் சகல இனத்துக்கும் பயன் அடையத்தக்கதாகவும் அமையவேண்டும்.

பிரித்தானிய ஆட்சியின் கீழ் இந் நாடு இதுவரைகாலமும் இருந்து வந்தது. பிரித்தானிய ஆட்சியில் இருந்து விடுபட்டு குடியரசு ஆவதை வரவேற்கும் இந் நேரத்தில் ஒவ்வொரு இனமும் தனது நிலையை நிர்ணயிக்கத்தக்கதாக அமைப்பு இடம்பெற வேண்டும்.

இந்தியாவில் காந்தி போராடிய சமயம் ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியே பிராந்தியம் அமைத்தார். பின் இந்தியா சுதந்திரம் அடைந்தபின் ஒவ்வொரு இனத்தவர்க்கும் ஒவ்வொரு மாநிலம் ஒதுக்கப்பட்டது. அதன் மூலம் இந்திய நாடு இன்று சுபிட்சமாக வாழ்கிறது. அதேபோல இலங்கையிலும் மொழிவழி பிராந்தியங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும். அப்போதுதான் இனங்களின் உரிமைகள் நிர்ணயிக்கப்பட்டு சுபிட்சமான நிலையை உருவாக்கலாம்.

தமிழ் மக்கள் தனியரசு கோரவில்லை. ஆகவே இரு இன ஐக்கியம் ஏற்பட்டு சமூகங்கள் ஒற்றுமைப் படத்தக்கதாக இத்திட்டம் அமைய வேண்டியதவசியம்.

உடுவில் எம். பி. வி. தர்மலிங்கம் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது: ஒவ்வொரு காலத்தில் புதிய புதிய அரசு ஏற்படும் சமயத்தில் ஒவ்வொரு திட்டங்களையும் மாற்றிவந்தன. இதனால் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தோம். ஆனால் இன்று அடிப்படைத் திட்டங்கள் மாற்றப்படும் நேரத்தில் இனத்தின் உரிமையை நிலைநாட்டத்தக்கதாக எல்லோரும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றார். புதிய அமைப்பு கட்சிஅடிப்படையில் அமையாமல் எல்லோருக்கும் பொதுவாக அமைய வேண்டும்.

## நாவற்குழிப்பகுதியில் 500 பேருக்கு வேலை வசதி

எழுதுமட்டுவாள், ஞாயிறு

மாதமொன்றுக்கு 300 ரூபாய்க்குஅதிகமாக உழைக்கும் வாய்ப்பு நாவற்குழி கிராமசபை எல்லைக்குள் வசிக்கும் சுமார் 500 குடும்பங்களுக்கு இருக்கிறதாம். கடற்றொழில் ஆராய்ச்சிக்குழு தனது அறிக்கையில் இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

தென்மராட்சி காரியாதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி குழுசமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இங்கு வசிக்கும் மீனவர்கள் பிடிக்கும் மீனும் இறாலும் விரைவில் பழுதடைந்துவருகின்றன. அவற்றைப் பாதுகாக்க குளிர்சாதனப் பெட்டி அவசியம் இப்பகுதியில் கேந்திர ஸ்தானமாக விளங்கும் கைதடி நாவற்குழி தெற்கு ஆழமற்ற கடற்கரையாகையால் நீர்கொழும்பிலுள்ள 'பிற்றப்பனை' என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட மீன் வளர்ப்பு பண்ணையை இங்கு ஆரம்பித்தால் நல்ல பலனைக் கொடுக்கும். அத்துடன் வள்ளத் தொழிற்சாலை ஒன்றும் உருவாகுவதன் மூலம் கடற்றொழில் வளத்தை மேம்படுத்த இலகுவாயிருக்கும்'

இக்குழுவில் நாவற்குழி கி. ச. தலைவர் திரு. எஸ். சடாட்சரம், தனங்கிளப்பு மறவன்புலோ நாவற்குழி கிராமசேவையாளர்கள் உட்பட இப்பகுதிப் பிரமுகர்கள் பலர் அங்கம் வகித்தனர்.

## வடக்கில் மாதர் முன்னணிக்கிளை

மாவிட்டபுரம், ஞாயிறு

அகில இலங்கை மாதர் முன்னணி வடபிரதேசக்கிளையை இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி வடபிரதேச அமைப்பாளர் திரு ஏ. வைத்திலிங்கம் அங்குரார்பணம் செய்துவைத்தார்.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி வேதவல்லி கந்தையா. உபதலைவர்கள்: திருமதிகள்: மகேஸ் ஆனந்தகுமாரசாமி, சமீ நாணயக்கார, புஷ்பா கந்தையா. செயலாளர்: திருமதி தங்கரத்தினம் கந்தையா. பொதுஅமைப்பாளர்; திருமதி பரமேஸ்வரி பரமானந்தம்

நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

## 14-வது கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

தபால்தந்தி ஊழியர்சங்க 14-வது வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 25-ம் திகதி யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இரகசியவாக்கெடுப்புமூலம் அன்றுகாலை 10 மணி முதல் 12-30 வரை நிர்வாகிகள் தெரிவு நடைபெறும் [illegible] தான் தெரிவித்துள்ளார்.

## கருவாடு உற்பத்தி

அரியாலை, ஞாயிறு

இலங்கைக்கு பெருமசெலவில் இறக்குமதி செய்யும் கருவாட்டின் ஒரு பதியை யாழ்ப்பாணம், மன்னார் பகுதியில் உற்பத்தி செய்ய வசதி உண்டு என்று கூறும் ஆலோசனைத் திட்டம் ஒன்றை கடற்றொழில் அமைச்சர் திரு ஜோர்ஜ் ராஜபக்ஸாவிடம் திரு. வீ. பொன்னம்பலம் உட்படச் சிலர் சமர்ப்பித்தனர். வடபகுதி கடற்றொழில் அபிவிருத்தி பற்றிய பல ஆலோசனைகள் இடம்பெற்றுள்ளன. இத்திட்டம் சம்பந்தமாக ஆராய கடற்றொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஸா விரைவில் வடபகுதிக்கு விஜயம் செய்வாரெனத் தெரிகிறது

## கிராம ஆஸ்பத்திரி

சுழிபுரம், ஞாயிறு

மத்தியபருந்துச்சாலையாக இயங்கி வந்த அக்கராயன்குள வைத்தியசாலை ஏப்ரல் முதல் திகதி தொடக்கம் கிராம வைத்தியசாலையாக இயங்கவுள்ளது

## போட்டி

அரியாலை, ஞாயிறு

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நாற்பது பாடசாலைகள் பங்குபற்றும் விளையாட்டுப் போட்டி இம்மாதம் 23-ம் திகதி நடைபெறும். இவை கோப்பாய் வட்டாரக் கனிஷ்டபாடசாலைகளாகும்.

## 4000 ஏக்கர் காணி சுவீகரிப்பு

கோட்டை, ஞாயிறு

கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மூன்று மாவட்டங்களில் தேயிலைத் தோட்டங்களாக விருந்து கைவிடப்பட்ட சுமார் நாலாயிரம் ஏக்கர் காணிகளை விவசாயம் செய்வதற்காக காணி அமைச்சு சுவீகரிக்க திட்டமிட்டுள்ளது

இந்த நிலங்களில் படித்த வாலிபர்களைக் குடியேற்றிப் பழச் செய்கை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் அவர்களை ஈடுபடுத்துவதே அமைச்சின் நோக்கமாகும்" இத்திட்டத்தின்கீழ் 1200 இளைஞர்கள் குடியேற்றப்பட இருக்கிறார்கள். இவர்களுக்கு விவசாய முயற்சிகள் பலன் கொடுக்கும்வரையிலும் மாதாந்தம் நூறு ரூபா அமைச்சினால் வழங்கப்படும்.

## திருவிழா

பருத்தித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன்கோயில்வருடாந்த உற்சவம் இம்மாதம் 25-ம் திகதி கொடியேற்ற வைபத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து 15 நாட்கள் திருவிழா நடைபெறும்.

## தீர்மானம்

கொழும்பு ஞாயிறு

அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் தனது வருமானத்தை வருடாவருடம் வீடமைப்புநிர்மாண அமைச்சரிடம் வெளியிடுவதெனத் தீர்மானித்துள்ளது.

(சி பி. ஏ.)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கே பயிற்சி

கோட்டை, ஞாயிறு

வேலைபார்க்கும் பெருந்தொகையான பட்டதாரிகள் தற்போதைய பட்டதாரிகள் பயிற்சித்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். இதனால் இவர்கள் ஏற்கனவே பார்த்த வேலையை ராஜினாமாச்செய்யும்படி அரசாங்கம் அவர்களைக் கேட்டுள்ளது

இப்பயிற்சித் திட்டம் வேலையற்ற பட்டதாரிகட்கென ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் தகுதிவாய்ந்தவர்களுக்குமேலதிகபயிற்சி அரசாங்க இலாகாக்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் கொடுக்கப்படும். இப்பயிற்சிக் காலத்தில் இவர்கட்கு அலவன்ஸ் கொடுக்கப்படும் பின்பு வேலையில் ஈடுபடுத்தப்படுவர் எனத்தெரியவருகின்றது.

## திறப்பு விழா

பருத்தித்துறை, ஞாயிறு

இம்மாதம் 27-ம் திகதி புலோலி இந்துக்கல்லூரிப் புதிய கட்டிடத்தை வடமாநிலக்கல்வியதிபதி திரு. டபிள்யூ. டீ. சி. மாதந்தினை திறந்து வைக்கவிருக்கிறார் பிரதம கல்வி ஆலோசகர் திரு. ஏ. சந்திரசேகரம் பிள்ளை பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. நவரத்தினம். கல்விப்பகுதிநிர்வாக அதிகாரி திரு. கே. தேவசிகாமணி ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றுவர்.



கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன. மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல; 37/39, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க!

திரு. ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சென்றல் -- சென்.ஜோன்ஸ்

# 73-வது கிரிக்கெட் மோதல் நாளை ஆரம்பம்

— நமது விளையாட்டு நிருபர் "தேவா" —

யாழ்ப்பாணம், திங்கள்

சென்றல் - சென்ஜோன்ஸ் கல்லூரிகளின் 73-வது வருடாந்தக் கிரிக்கெட் மோதல் நாளை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

மத்திய கல்லூரி இவ்வருடம் மொத்தம் 8 போட்டிகளில் கலந்து கொண்டது இதில் ஐந்து போட்டிகளில் வெற்றியும், ஒரு போட்டியில் தோல்வியும் அடைந்தது. இரு போட்டிகள் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தன.

சென். ஜோன்ஸ் கல்லூரி இவ்வருடம் மொத்தம் 6 போட்டிகளில் கலந்து கொண்டது. இதில் 4 போட்டிகளில் வெற்றியும், இரு போட்டிகளில் தோல்வியும் அடைந்தது

இவ்விரு கல்லூரிகளுக்குமிடையில் இவ்வருடம் நடைபெறும் 73-வது வருடாந்தக் கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்களைப் பற்றிய விபரம் வருமாறு:-

## மத்திய கல்லூரி கோஷ்டி விபரம்

எம். ஜெயக்குமார்: கிரிக்கெட் உலகில் 4 வருட அனுபவம் கொண்ட இவர், இக்கோஷ்டியின் காப்டனாக விளங்குகின்றார். ஆரம்ப இடதுகை துடுப்படிவீரரான இவர் தமது கல்லூரியில் 'சிறந்த கிரிக்கெட் வீரர்' என்ற விருதைப் பெற்றவர்.

ஆர் றஞ்சித்குமார்: உதவிக் காப்டனான இவர், கிரிக்கெட் உலகில் 3 வருட அனுபவம் பெற்றவர் யாழ்ப்பாணக் கல்லூரியுடன், நடந்த மோதலில 87 ஓட்டங்களைப் பெற்ற சிறந்த துடுப்படி வீரர். சுழல்பந்து வீசுவதிலும், பந்து தடுப்பதிலும் வல்லவர். 'சிறந்த கிரிக்கெட் வீரர்' என்ற விருதையும் பெற்றவர்

ரி. மகேந்திரன்: சிறந்த துடுப்படி வீரரான இவர், மகாஜனக் கல்லூரியுடன் நடந்த மோதலில ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களைப் பெற்றவர் சுழல்பந்து வீசுவதிலும், பந்து தடுப்பதிலும் வல்லவர். 'சிறந்த கிரிக்கெட் வீரர்' என்ற விருதையும் பெற்றவர்

ஜே கே. பிரேமச்சந்திரன்: கிரிக்கெட் உலகில் 2 வருட அனுபவம் கொண்ட இவர் வடமாகாணக் கல்லூரிகளிலேயே அதிவேகமான பந்து வீச்சு வீரர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். சகல துறைகளிலும் சிறந்து விளங்கும் இவர் 'சிறந்த கிரிக்கெட் வீரர்' என்ற விருதைப் பெற்றவர்.

டி. ஜே. ஞைலஸ்: கிரிக்கெட் உலகில் 2 வருட அனுபவம் கொண்ட இவர் துடுப்பெடுத்தாடுவதிலும், பந்து தடுப்பதிலும் வல்லவர், இவ்வருடப் போட்டிகளில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியவர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்

கே. சாந்திக்குமார்: கிரிக்கெட் உலகிற்குப் புதியவரான இவர், வேகமாகப் பந்து வீசுவதில் சிறந்தவர்.

என். எஸ். நஷீர்: இக்கோஷ்டியின் விக்கெட் கீப்பரான இவர் கிரிக்கெட் உலகில் முதல் வருட அனுபவம் கொண்டவர், ஆரம்ப துடுப்படி வீரரும் கூட.

பி. சுப்பிரமணியம்: வேகமாகப் பந்து வீசுவதிலும் பந்து தடுப்பதிலும் வல்லவர். கிரிக்கெட் உலகில் முதல்வருட அனுபவம் கொண்டவர்.

ஜி. ஆர்.ஹண்டி: கிரிக்கெட் உலகில் புதியவரான இவர் தமது கோஷ்டியில் ஆரம்ப அதிவேகப் பந்துவீச்சு வீரராக விளங்குகின்றார்.

ஆர். விக்டர்: கிரிக்கெட் உலகிற்குப் புதியவரான இவர், பந்து தடுப்பதிலும், துடுப்பெடுத்தாடுவதிலும் சிறந்தவர்:

எஸ் ராஜேந்திரா: பந்து தடுப்பதில் சிறந்தவரான இவர் கிரிக்கெட் உலகில் முதல் வருட அனுபவம் கொண்டவர்.

## புத்தாண்டு விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை ஞாயிறு

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு கட்டைவேலி சனசமூகநிலையம் ஒரு விளையாட்டுப் போட்டிக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இவ் விளையாட்டுப் போட்டியில் போர்த்தேங்காயடித்தல் தேங்காய் துருவுதல் கிடுகு பின்னுதல் கிளித்தட்டு. வாரோட்டம் செந்தியடித்தல் போன்ற சுதேச போட்டிகளும் இடம் பெறவுள்ளன. உடுப்பிட்டி எம் பி. திரு க ஜெயக்கொடி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## சேகரிப்பு

அம்பன், ஞாயிறு

உள்ளூராட்சி மன்றங்கள் தோறும் அமைக்கப்பட்டு வரும் அபிவிருத்திச்சபைகளில் பணிபுரியத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பட்டதாரிகள், தற்சமயம் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலுமுள்ள வட்டாரங்களிலுள்ள வேலையற்றோர் தொகை, தரிசுநிலம், மூலப்பொருட்கள் முதலியவற்றைக் கிராமசபைகளின் உதவியுடன் சேகரித்துவருகின்றனர்.

## சுற்றுலா

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை இ. போ. ச. பணியக ஊழியர்கள் அடுத்தமாத முற்பகுதியில் அகில இலங்கைச் சுற்றுலா வொன்றை மேற்கொள்ள விருக்கின்றனர். இவர்கள் சரித்திரப் பிரசித்திபெற்ற தலங்களையும் நகரங்களையும் பார்வையிடுவர்.

## புதிர் போட்டி கிரிக்கெட் இன்று இறுதிநாள்

யாழ்ப்பாணம், திங்கள்

'ஈழநாடு' கிரிக்கெட் புதிர் போட்டி இன்றுடன் முடிவடைகிறது. இன்று நன்பகல் வரை கிடைக்கப்பெறும் கூப்பன்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் கூப்பன்களை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் ஒப்படைக்கமாம்.

யாழ் மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெறவிருக்கும் 73-வது கிரிக்கெட் போட்டியையொட்டி 'ஈழநாடு' நடாத்தும் 'கிரிக்கெட் புதிர் போட்டி'

### புதிருக்கான கேள்விகள்

(1) கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கான கோஷ்டியைத் தெரிவு செய்வதற்கு 'பூவா-தலையா' போட்டுப் பார்க்கும் போது யாருக்கு வெற்றி கிடைக்கும்?

(2) கிரிக்கெட் போட்டியில் யாருக்கு இறுதி வெற்றி கிடைக்கும்?

(3) கூடுதலான விக்கெட்டுக்களை 'பேஸ்மன்'களா 'ஸ்பின்னர்'களா எடுப்பார்கள்?

4) முதல் இன்னிங்ஸில் கூடுதலான ரன்களை எந்தக் கோஷ்டி எடுக்கும்?

(5) இரண்டு இன்னிங்ஸிலும் இரு கோஷ்டிகளிலும் யார் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்துவார்கள்?

(6) முதல் இன்னிங்ஸில் சென். ஜோன்ஸ் காப்டனா சென்றல் காப்டனா கூடுதலான ரன்களை எடுப்பர்?

(7) இப்போட்டியில் 'ஓல் றவுண்டர்'ருக்கான பரிசை யார் பெறுவார்கள்?

(8) இப்போட்டிக்கு யார் யார் மத்தியஸ்தம் (அம்பயஸ்) வகிப்பார்கள்?

### போட்டி நிபந்தனைகள்

0 ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.

0 எல்லாம் சரியானவிடைகளுடன் கூப்பன் கிடைக்காத பட்சத்தில் ஆகக் கூடிய சரியான விடையுடன் வரும் கூப்பனுக்கு முதல் பரிசு வழங்கப்படும். கூடுதலான சரியான விடைகளை அனுப்பும் மற்றும் நால்வருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

0 கூப்பன்களை 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர், 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

0 புதிர் போட்டிக்கான மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதியானது.

0 கூப்பன்களுடன் வராத விடைகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

0 புதிருக்கான விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 22-3-71 நண்பகல் 12 மணிக்கு முன்.

0 உங்கள் விடைகளை அழகாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

### பரிசு வழங்குவோர் விபரம்

'ஸ்ரில்' புகைப்படப் பிடிப்பாளர் திரு. கனகலிங்கம் (சிட்டு)

யாழ். மெட்டல் இன்ஸ்றீஸ் ஸ்தாபனம்.

'லிங்கம் ரெக்ஷஸ்' பிரதான வீதி. யாழ்ப்பாணம்.

'பிறின்ஸ்' ஸ்ருடியோ பிரதான வீதி. யாழ்ப்பாணம்.

திரு சி. கணேசன் 'ஹரி' ஒலி. ஒளி அமைப்பாளர் சப்பல் வீதி யாழ்ப்பாணம்

காலஞ் சென்ற பிரபல விளையாட்டு வீரரும், யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவருமான திரு. வி ரி. மகாலிங்கத்தின் ஞாபகார்த்தமாக இவரின் சகோதரர் திரு வி ரி சிவலிங்கமும் ஒரு பரிசை வழங்க முன் வந்துள்ளார்

சென்றமுறை இப் புதிர் போட்டியை யாழ்ப்பாணம் றப்பிஅட்வை சேர்ஸ் திரு. வி. கந்தவேளின் உதவியுடன் சிறப்பாக நடத்தினோம் என்பதை நேயர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்

## சென். ஜோன்ஸ் கோஷ்டி விபரம்

ரி தேவபாலன்-: இவர்தான் இக்கோஷ்டியின் காப்டன். கிரிக்கெட் உலகில் மூன்று வருட அனுபவம் கொண்டவர். சிறந்த துடுப்படி வீரர் சென். பற்றிக்ஸ் கல்லூரியுடன் நடந்த மோதலில் 51 ஓட்டங்களைப் பெற்றவர் இவர்தான் இக்கோஷ்டியின் 'விக்கெட்கீப்பர்'

என் நவீனன்:- இவர் இக்கோஷ்டியின் உதவிக் காப்டன் சிறந்தவலதுகைதுடுப்பு வீரர். பந்து தடுப்பதில் மட்டுமின்றி, எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்குகின்றார். கிரிக்கெட் உலகில் 2 வருட அனுபவம்கொண்டவர்.

எஸ். ஸ்ரீராமரட்ணம்;- இக்கோஷ்டியின் ஆரம்ப அதிவேகப் பந்துவீரர். இம்முறை நடைபெற்றபோட்டிகளில் மிகக் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்தியவர் கிரிக்கெட் உலகில் 2 வருட அனுபவம் கொண்ட இவர். இக்கோஷ்டியின் ஆரம்ப இடதுகை துடுப்படி வீரர்

ரி மனோகரன்:- கிரிக்கெட் உலகில் இரு வருட அனுபவம் பெற்றவர் இக்கோஷ்டியின் ஆரம்ப பந்து வீச்சு வீரரான இவர், இவ்வருட கிரிக்கெட் மோதல்களில் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்தியவரில் இவரும் ஒருவர்

பி. ஆனந்தலிங்கம்:- வேகமாகத் துடுப்பெடுத்தாடக் கூடியவர் பந்து தடுப்பதில் வல்லவரான இவர் கிரிக்கெட் உலகில் 2 வருட அனுபவம் பெற்றவர்

எச். அல்போன்ஸ்:- கிரிக்கெட் உலகில் 2 வருட அனுபவம் கொண்ட இவர் சிறந்த இடதுகை துடுப்படி வீரர்

ரி பாலஜோதி;- இக்கோஷ்டியின் ஆரம்ப துடுப்படி வீரரான இவர் சிறந்த பந்து தடுப்பு வீரர். கிரிக்கெட் உலகில் 2 வருட அனுபவம் கொண்டவர்

ஆர் ஜி செல்வநாயகம்:- இடதுகை பந்து வீச்சு வீரர் இவர். கிரிக்கெட் உலகில் 2 வருட அனுபவம்கொண்டவர்

இ எஸ். மிரீஸ்:- கிரிக்கெட் உலகுக்குப் புதியவரான இவர், சிறந்த வலதுகை துடுப்படி வீரர்

என். எஸ் அலெக்சாண்டர்:- முதல் வருடத்திலேயே சிறப்பாக 'சுழல் பந்து வீசுவதில் சிறந்து விளங்குகின்றார்; சிறந்த துடுப்படி வீரரும் கூட

ரி சுகுமார்:- கிரிக்கெட் உலகிற்குப் புதியவரான இவர் சகல துறைகளிலும் சிறந்து விளங்குகின்றார்

## இருளில்

பருத்தித்துறை. ஞாயிறு

மின்சார மாற்றியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வல்வெட்டித்துறை நகர வீதிகள் ஒளியின்றிக் கடந்த சில நாட்களாகக் காணப்படுகின்றன ஆயினும் வீடுகள் வழக்கம்போல மின்னொளி வசதிகளைப் பெறுகின்றன.

"ஈழநாடு" நடாத்தும்

கிரிக்கெட் 'புதிர் போட்டி' கூப்பன்

பெயர்..........................................

விலாசம்........................................

................................................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாசகாரவேலைகள், பொருட்கள் பதுக்குதல்:

# தகவல்கொடுக்க மறுப்பவர் மீது சட்ட நடவடிக்கை

## பிரதமர் நேற்று வழங்கிய விசேஷ அதிகாரம்

கோட்டை, ஞாயிறு

நாட்டின் நாசகார வேலைகளிலும், பொருட்களைப் பதுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களை பொலிசாருக்குத் தெரிவிக்க மறுப்பவர்களைக் கைது செய்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு பல உயர் அதிகாரிகளுக்கு அரசாங்கம் அதிகாரம் வழங்கியுள்ளது.

தற்போதைய அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளகூடிய அதிகாரத்தைப் பிரயோகித்து, நாட்டில் உள்ள நிலைமையைச் சமாளிப்பதற்காக, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஏழுவகையான அதிகாரிகளை நியமித்து, அவர்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்கியுள்ளார்.

பொலிஸ் இராணுவத்தினருடன் அரசாங்க அதிபர்கள் உதவி அரசாங்க அதிபர்கள் மேலதிக அரசாங்க அதிபர்கள், மற்றும் உயர் அதிகாரிகள்பலருக்கு இந்த அதிகாரம்வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் குழப்பம் விளைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடத்திட்டமிட்டிருப்பவர்கள் பற்றிய தகவல்கள் தெரிந்திருந்தும் அவர்கள் பற்றிய தகவல்களை அதிகாரிகளுக்கு வெளிப்படுத்த மறுப்பவர்களைக் கைது செய்து, நடவடிக்கைஎடுக்க இந்த அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு.

பொருட்களை பதுக்கிவைத்திருப்பவர்களையும், பொருட்களை வைத்துக்கொண்டு விற்க மறுக்கும் வியாபாரிகளை கைதுசெய்யும்படியும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் விலைக்கட்டுப்பாட்டை மீறி பொதுமக்களிடம் கொள்ளைலாபமடிக்கும் தேசத்துரோக செயல்களில் ஈடுபடுபவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பை உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பல உயர் அதிகாரிகளிடம் கையளித்துள்ளார்.

பிரதமமந்திரி, சபாநாயகர், அமைச்சர்களின் அந்தரங்கச் செயலாளர்கள், ஆகியோருக்கு வர்த்தக அமைச்சர் இவ்வித அதிகாரத்தை வழங்கியுள்ளார். அத்துடன் 22 உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### பேராதனை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பேராதனை பல்கலைக் கழக மாணவர் சபையினரும் இந்தத் தேசவிரோத நாசகார பொருட்களைக் கண்டுபிடிப்பதில் பெரிதும் உதவியதாக அறிவிக்கப்படுகிறது

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இப்போது அமைதி நிலவுவதாகவும், மாணவர்களுக்கு தீங்கு நேரக்கூடிய சகல நாசகார பொருட்களும் அகற்றப்பட்டுவிட்டதாகவும். பெற்றோர்கள் அஞ்சவேண்டியதில்லை யென்றும் தெரிவிக்கப்படுகிறது

### இராப்போஜனம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரிகளுக்கிடையே நடைபெறும் கிரிக்கட் போட்டியை முன்னிட்டு யாழ் மத்திய கல்லூரி பழையமாணவர்கள் நாளை யாழ். பல்மேரு கொட்டலில் இராப்போஜன விருந்தொன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

விருந்தில் பங்குபற்றும் மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் மத்திய கல்லூரியில் குறித்த விருந்துக்கான பிரவேசச் சீட்டை பெற்றுக்கொள்ளும்படிகேட்கப்பட்டுள்ளனர்.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" [illegible] யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ந் [illegible]

### பிறரின்

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

விசாரணை தேர்தல் நீதியரசர் திரு எஸ் ஆர் விஜயதிலகா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகிறது.

திரு கே துரைரத்தினம் பருத்தித்துறை எம் பியாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து புலோலி கிழக்கைச் சேர்ந்த திரு ஆசைப்பிள்ளை திருநாவுக்கரசு இந்த ஆட்சேபமனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி மனோரமா அருச்சுனராசா என்ற சிறுமி தேர்தலில் போட்டியிட்ட திரு என் நடராசாவுக்கு எதிராக பொய்த்தகவல் ஒன்றைப் பரப்பியதாக மனுதாரர் தம்மனுவில் குற்றஞ்சாட்டியுள்ளார், வல்வெட்டித்துறையில் திரு. துரைரத்தினத்தை ஆதரிக்கும் முகமாக நடந்த கூட்டமொன்றிலேயே செல்வி மனோராமா இந்தப்பொய்த் தகவலைப் பேசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு என். நடராசா மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

1945-ம் ஆண்டுமுதல் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினராக இருந்துவருகிறேன் போட்டியிட்ட உள்ளூராட்சி தேர்தல் எல்லாவற்றிலும் வெற்றிபெற்றிருக்கிறேன்.

"காலஞ்சென்ற அர்ச்சுனராசா எனது வீட்டிலிருந்து 10 யார் தொலைவில் வசித்துவந்தார். 1968-ம் ஆண்டு கொலைசெய்யப்பட்டார். அப்போது 1-ம் எதிரிக்காக எனது அனுசரணையுடன் திரு. ஜி ஜி பொன்னம்பலம் ஆஜரானார் 3-ம் எதிரிக்காக உடுப்பிட்டித் தொகுதியின் தற்போதைய அங்கத்தவர் திரு கே ஜெயக்கொடி ஆஜரானார்.

அருச்சுணராசா கொலை 'அரசியல்' கொலை' என்று கோர்ட்டில் தெரிவிக்கப்படவில்லை, இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நேசராசா என் உறவினரல்ல. மே 10-ம் தி-தி திருநாவுக்கரசு என்பவர் என்னிடம் வந்து முதல் நான் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் [illegible] மனோராமா [illegible] சணராசா கொலையுடன் சம்பந்தப்படுத்தி பேசியதாகக் கூறினார்.

மனோராமா துண்டுப் பிரசுரமொன்றை வாசித்ததாகவும், அதில் என்னைச் சம்பந்தப்படுத்திப்பேசிய விஷயங்கள் இருந்ததாகவும், இது பற்றி சாட்சியமளிக்க துரைசாமி என்பவர் தயாராக இருந்ததாகவும் [illegible] கூறினார்.

[தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது]

### வண்ணை வைத்தீஸ்வரன் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் 12-ந் திகதியுடன் நிறைவுறும்.

திருவிழாக் காலங்களில் தினசரி மாலை கதாப்பிரசங்கமும் இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறும்.

0 0 0

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று நாகபடுவான், கரிபடுவான், வேரவில், கிராஞ்சி பூனகரி, பல்லவராயன்கட்டு ஆகிய இடங்களின் அபிவிருத்தி பற்றிய தேசிய அபிவிருத்திச் சபையின் முதல் கூட்டம் பல்லவராயன்கட்டுக் கிராம சபையில் நடைபெறும்.

கூட்டத்துக்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகர தலைமைவகிப்பார். (குவிம)

### மண்டைதீவில் 7 வீடுகள் தீக்கிரை

யாழ்ப்பாணம், திங்கள்

மண்டைதீவில இருகரப்பினருக்கிடையே நடைபெற்ற கைகலப்பைத் தொடர்ந்து ஏழு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன இச்சம்பவம் நேற்று நடந்தது.

மணமான ஒருவர் இளம் பெண் ஒருவரைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படும சம்பவத்தைத் தொடர்ந்து இக்கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் தலைமையில் பொலிஸ் கோஷ்டி ஒன்று ஸ்தலத்திற்கு விரைந்து சென்று நிலைமையைச் சமாளித்தது

இப்பகுதியில் அமைதியை நிலைநாட்டும்படியும், தொடர்ந்தும் இவ்வித செயல்களில ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இப்பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் மண்டைதீவில தற்காலிகப் பொலிஸ் நிலையமொன்றும் அமைக்கப்பட்டுளது. பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்

### வடபகுதி தரிசு நிலங்களில் வீடமைப்புத் திட்டங்கள்!

மாவிட்டபுரம், ஞாயிறு

வடக்கில் உள்ள தரிசு நிலங்களை கவீகரித்து வீடமைப்புத் திட்டங்கள் அமைப்பது பற்றி ஆராய இம்மாதம் இறுதிப் பகுதியில் வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

கிரிக்கெட்

### இந்தியா 114—1

ஜோர்ஜ்டவுண், மார்ச் 2

இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும் மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் ஜோர்ஜ்டவுனில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியில் இரண்டாம் டெஸ்டில் இந்திய கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸில் ஆட்டநேரமுடிவில் நேற்று 1 விக்கட் நஷ்டத்துக்கு 114 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

'டொஸ்' வெலித்து முதலில் ஆடிய மேற்கிந்திய கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் 363 ஓட்டங்கள் எடுத்திருந்தது

### கச்சதீவிலிருந்து திரும்பினர்

யாழ்ப்பாணம், திங்கள்

கச்சதீவு பெருநாளுக்குச் சென்ற யாத்திரீகர்களில் ஒருபகுதியினர் நேற்று திரும்பிவந்தனர். சிலரிடமிருந்து சேலைகள் போன்ற சில பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

### முன்னேற்பாடின்றி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருமணி நேரம் நடந்ததாக அறிவிக்கப்படுகிறது இன்றைய சந்திப்பில் எவ்வித மாற்றமுமிருக்கவில்லையென்றும், நாளையும் சந்திப்பு இடம்பெறுமென்றும் டாக்கா வானொலி அறிவித்தது.

தேசிய அவாமி லீக் கட்சிச் செயலாளரும் இன்றைய பேச்சுவார்த்தையில் உடனிருந்தார்.

பாங்களா தேசிய மக்களை அடிமைகளாக உபயோகித்த காலம் மலையேறிவிட்டதாக இன்று நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் திரு. முஜிபுர் சொன்னார்

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரியமமன் கோவில் லக்ஷநாமர்ச்சனை, மகாசங்காபிஷேகம் குளிர்த்தி ஆகிய நிகழ்ச்சிகள் அடுத்த மாதம் 7-ந் திகதி நடைபெறவிருக்கின்றன

அன்று அபிஷேக ஆராதனையுடன் லக்ஷநாமார்ச்சனை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மகாசங்காபிஷேகமும் குளிர்த்தியும் நடைபெறும்.

### மக்கள் வங்கி இடமாற்றம்

யாழ்ப்பாணம் திங்கள்

இதுவரை காலமும் கே கே எஸ் வீதியில் இருந்த மக்கள் வங்கி அலுவலகம் இம்மாதம் 26ம் திகதிமுதல் ஸ்ரான்லி வீதியில் 19ம் இலக்கத்திலுள்ள புதிய கட்டடத்திற்கு மாறுகின்றது. மக்கள்வங்கி நடைமுறை, சேமிப்புக் கணக்குகள்கடன் வசதி ஆகியவற்றுடன் நகை அடைவுபிடித்தல், ஜீரோ மற்றும் முதலீட்டுச்சேமிப்புக்கணக்குப் போன்ற மற்றைய வங்கிகளில்லாத சேவைகளைச் செவ்வனே செய்வதற்கு இடவசதி போதாத காரணத்தால் தனது அலுவலகத்தைப் புதிய கட்டிடத்திற்குமாற்றுவதற்கு முடிவு செய்தது. இக்கட்டிடம் இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபன அலுவலகத்திற்கு அருகே அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org